## முதன்மை சார்பு நீதிமன்றம், பொன்னேரி

## ஓ.எஸ்.எண்.85/2012

## நாள் :19.12.2022

இந்நீதிமன்ற எழுத்தரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வா.சா. 2சாட்சியின் வாக்குமூலம் 1878ம் ஆண்டில் 10-வது சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.

பெயர் : வா.சா.2 திருமதி.அம்புஜம்மாள்

வயது :

த/பெ :

தொழில் :

மதம் :

சாதி :

விலாசம்

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-**

உயிலில் எழுதியிருந்த சொத்து ஜெனார்த்தனன் செட்டியாரின் மூதாதையர் சொத்து என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. உயிலில் கண்டுள்ள சொத்து பற்றிய விவரங்கள் எனக்கு தெரியாது. இந்த உயில் எழுதுவதற்கு முன்பாக முதல் உயில் எழுதிய விவரம் எனக்கு தெரியுமா என்றால் முதல் உயில் எழுதினேன் என்று சொன்னார்கள் அதை நான் பார்க்கவில்லை. வாசாஆ.2 இணைப்பு உயிலில் உள்ள சொத்து பற்றி நான் கேள்விபட்டேனா என்றால் நான் படித்து தான் உயிலில் கையெழுத்து போட்டேன். சொத்து விவரங்கள் பற்றி எனக்கு ஞாபகம் இல்லை. அந்த சொத்து யாருடைய மூதாதையர் சொத்து என்று என்னால் சொல்லமுடியாது என்றால் சரிதான். உயிலில் சொல்லப்பட்டுள்ள சொத்தின் விஸ்தீரணம் எவ்வளவு என்று குறிப்பிட்டு சொல்ல முடியுமா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. ஜெனார்த்தனன் செட்டியார் எப்போது இறந்தார் என்று எனக்கு ஞாபகம் இல்லை. விஜயலட்சுமி என்கிற பேபிஅம்மாள் எப்போது இறந்தார் என்று எனக்கு ஞாபகம் இல்லை. உயில் எந்த தேதியில் எழுதப்பட்டது என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. எனது பிரமாண வாக்குமூலத்தல் உயில் எழுதி வைத்த வழக்கறிஞரை திரு.சந்தரராஜன் என்பவரை அறிமுகம் செய்து வைத்தார் என்று சொல்லியிருக்கிறேன் அந்த வழக்கறிஞரை எனக்கு ஞாபகம் இருக்கிறதா என்றால் எனக்கு ஞாபகம் இருக்கிறது. எந்த தேதியின் அறிமுகம் செய்து வைத்தார்கள் என்றால் தேதி, வருடம் ஞாபகம் இல்லை. எந்த இடத்தில் வைத்து அறிமுகம் படுத்தினார் என்றால் ஜெனார்த்தனன்

செட்டியார் வீட்டில் வைத்து அறிமுகம் படுத்தினார்கள். பொதுவாக உரிமை இல்லாத சொத்துக்கு உயில் எழுதி வைக்க முடியாது என்றால் ஞாபகம் இல்லை.தற்போது சாட்சி மீண்டும் எழுதி வைக்கமுடியாது என்று சாட்சியமளிக்கிறார். ஜெனார்த்தனன் செட்டியார் இறந்தபோது எவ்வளவு கூட்டம் வந்தது என்றால் 50 பேர்கள் வந்தார்கள். அந்த இறப்பிற்க்கு நான் சென்றேன். அவருடைய சடலத்தை வீட்டிற்க்குள் வைத்திருந்தனர். வீட்டுக்கு வெளியே பிரச்சனை இருந்ததா என்றால் இல்லை. சந்திரபாபு அந்த இறப்பிற்க்கு வரவில்லை. வெளியில் பிரச்சனை நடந்தது சந்திரபாபு ஈமகாரியங்கள் செய்யும் போது பிரச்சனை வந்தது என்றும் ஊர் பெரியவர்கள் மத்தியஸ்தம் செய்தார்கள் அவர் தனியாகவே ஈமகாரியத்தை செய்தார். ஊர்காரர்கள் இந்த பிரச்சனையை எழுத்து மூலமாக எழுதி கையொப்பயிட்டு கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை தொடர்சி ஒத்திவைக்கப்டுகிறது. )

சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறே என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

**முதன்மை சார்பு நீதிபதி,**
**பொன்னேரி.**